இணைப்பு II

[107 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கன்னியாகுமரி படகுத்துறையில் மணலை வாரி எடுப்பதில் எழும் பிரச்சினைகளில், உள்ளூர் மீனவர்களுக்கும் விவேகாநந்தா கேந்திரத்தினருக்கு மிடையே ஏற்பட்ட தகராறுகளைத் தொடர்ந்து, விவேகாநந்தா பாறை நினைவுச் சின்னத்திற்கும் கடற்கரைக்கும் இடையே நடைபெற்று வரும் படகுப் போக்குவரத்தை நிறுத்திவிடப் போவதாக ஒரு எண்ணத்தை கேந்திரத்தினர் ஏற்படுத்தினர். இரு தரப்பினரிடையே உள்ள தகராறை தீர்ப்பதற்காகவும், ஒரு சுமுகமான உடன்பாட்டை ஏற்படுத்துவதற்காகவும், பல்வேறு முயற்சிகள் பல்வேறு மட்டங்களில் எடுக்கப்பட்டன. அவை அனைத்தும் பயன்றறுப் போயின.

2. நீண்ட நாட்களாக இருந்து வரும் இந்த சச்சரவிற்கு ஒரு சுமுகமான முடிவு காண்பதற்காக 1-7-1980 அன்று போக்குவரத்து அமைச்சர் கன்னியா குமரியில் அரசு அதிகாரிகள் மற்றும் இரு தரப்பு பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். இதில் படகுத்துறையில் மணல் வாருவது மற்றும் இதைச் சார்ந்த பொருட்கள் மீதும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. மீண்டும், 22-8-1980 அன்று கன்னியாகுமரியில் மீனவப் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள், மற்றும் திரு. முத்துக்கிருஷ்ணன், சட்ட மன்ற உறுப்பினர், முதலானோர் அடங்கிய கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் கலந்துரையாடல் நடத்தினார். அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, கடல் அரிப்பு ஏற்படும் இடத்திற்கு வண்டல் மணலைக் கொண்டு செல்லவும், மீனவர் படகுகளை நிறுத்துவதற்காக ஒரு சறுக்குத் தளம் கட்டவும், அரசு (வனம் மற்றும் மீனளத்துறை) 3—10—1980 நாளிட்ட நிலை ஆணை எண் 1306-ல் ரூ. 1.40 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறது.

3. 7-12-1980 அன்று முதலமைச்சர் கன்னியாகுமரிக்குச் சென்று 8-12-1980 அன்று சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். அவரது வேண்டுகோளின்படி படகுப் போக்குவரத்து தடையில்லாமல் விவேகாநந்தா கேந்திரத்தாரால் நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினையில் நிலையான ஒரு முடிவு ஏற்படுவதற்காக, முதலமைச்சர் விவேகாநந்தா கேந்திரத்தினருடனும், மீனவர்களுடனும் அதி விரைவாக

கடைசிச் சுற்று பேச்சு வார்த்தை நடத்தத் திட்டமிட்டிருக்கிறார். முதலமைச்சர் கன்னியாகுமரி சென்று வந்த பிறகு படகுத்துறையில் மண் வாருவதிலும், கடல் அரிப்பைத் தடுப்பதிலும் ஒரு முழுமையான தீர்வு காண்பதற்காக உடனே தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

3. மீண்டும் ஒரு முறை அந்த இடத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செல்வதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. விவேகாநந்தர் சின்னத்திற்கு சென்று வருகின்ற படகு போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் ஒரு வழி ஏற்படுத்தவும், அதே நேரத்தில் மீனவர்களுக்கும் இடையூறு இல்லாத வகையில் திட்டங்கள் செயலாற்றப்படவேண்டும் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற உணர்வை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக மீனவர்களுக்கு உள்ள வேறு பிரச்சினைகளுக்குக்கூட தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற உணர்வை தெரிவித்துள்ளார்கள்.

4. விவேகாநந்தர் நினைவுச் சின்னத்தருகே மற்றொரு அலை தடுப்புச் சுவர் கட்டலாமா என்ற கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது. அதற்கான மதிப்பீடு தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) அவர்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுகிறது.

5. கன்னியாகுமரி படகுத்துறையில் தேவையான அளவு மணல் தூர் வாரும் நிலமை குறித்தும், மீனவக் குடியிருப்புப் பகுதிகளில் கடலரிப்பைத் தடுக்க நடவடிக்கைகள் குறித்தும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்க இந்திய தூர் வாரும் கழகப் பிரதிநிதி ஒருவர், தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைமைப் பொறியாளர் மற்றும் மாநிலத் துறைமுக அலுவலர் (தலைவர்) ஆகியோரைக் கொண்ட ஒரு குழு சமீபத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இக்குழு அமைக்கப்பட்ட 10 நாட்களில், மேற்குறித்த விவரங்களை விரிவாக ஆராய்ந்து, தொழில் நுட்ப ஆலோசனைகளையும், திட்டவட்டமான தீர்வினையும் தரவேண்டும். இக்குழுவின் அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது.

6. மேற்கூறியவற்றிலிருந்து கன்னியாகுமரியில் விவேகாநந்தர் நினைவுப் பாறை நிர்வாகத்தினர் 5-12-1980 முதல் படகுப் போக்குவரத்தை நிறுத்தி விட்டனர் எனக் கூறுவது சரியல்ல என்பது தெரிய வரும்.